தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ்தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.
8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044-24341251
Website : www.forests.tn.gov.in


# வனக்காவலர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் நிரப்புதல்

(விளம்பர எண். 1/2019, நாள் : 07-03-2019 / அறிவிக்கை எண்-1).

## இணையம் வாயிலாக விண்ணப்பிக்கும் போது ஏற்படும் எதிர்பார்ப்பு கேள்விகளும் அதற்கான பதில்களும் (தொழிற்நுட்பம்)

1) **இணையம் வாயிலாக விண்ணப்பிப்பதற்கு உரிய பக்கத்தினை அணுகும்போது ஏற்படும் மிகுந்த காலதாமதத்திற்கு என்ன செய்ய வேண்டும்?**
இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தல் பணி மேற்கொள்ளும் போது ஏற்படும் காலதாமதத்திற்கு இணையத்தின் வேகம், அதிகமான நபர்கள் ஒரே சமயத்தில் பதிவு செய்ய முயலுதல் போன்ற பல்வேறு காரணங்கள் உள்ளது. ஆகவே, உடனடியாக உரிய பக்கத்தில் விபரங்கள் பதிய இயலாவிடில் 15 நிமிடங்கள் கழித்து மீண்டும் முயற்சி செய்யவும் அல்லது நெரிசல் இல்லாத காலமான இரவு நேரங்களில் உள்நுழையவும்.

2) **எனது விண்ணப்பம் பதியப்பட்டுவிட்டது என்பதை எவ்வாறு அறிந்து கொள்வது?**
உரிய விபரங்களை பதிந்தபின் **“சமர்ப்பி“** பொத்தானை அழுத்தினால், கணிணியால் **பதிவு எண்** மற்றும் **கடவுச்சொல்** உருவாக்கப்பட்டு **“நீங்கள் வெற்றிகரமாக பதிவு செய்துள்ளீர்”** என திரையில் மின்னும். உங்களது மின்னஞ்சல் மற்றும் குறுந்தகவல்கள் வழியாக தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல் அனுப்பி வைக்கப்படும். இவ்விபரங்களை கவனமாக பாதுகாப்பாக வைத்துக்கொள்ளவும். இதனை பாதுகாப்பாக வைத்துக்கொள்ளாவிடில் விண்ணப்பப்படிவத்தினை மறு பிரதி எடுக்கவோ, அனுமதிச் சீட்டினை பதிவிறக்கம் செய்யவோ இயலாது.

3) **எனது விண்ணப்பம் பதிவு செய்தது குறித்தான மின்னஞ்சல் எனக்கு கிடைக்கவில்லை**
தற்காலிக பதிவு எண் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை தானாகவே மின்னஞ்சல் மூலமாக அனுப்பும் நடைமுறை கணிணியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மின்னஞ்சல் தகவல் தங்களுக்கு வினியோகம் (அனுப்புவதில்) ஏற்படும் தடங்கல் உங்களது மின்னஞ்சல் முகவரி சரியாக தெரிவிக்காமல் இருப்பதாலோ/ உங்களது சேவை நிறுவனம் மின்னஞ்சல் தகவலை ஏற்றுக்கொள்வதையோ / ஒட்டுமொத்தமான மின்னஞ்சல் தகவலை மாற்றம் செய்வதையோ / குப்பைத்தகவலாக கருதியோ/ ஒரே சமயத்தில் எங்களது செயலியால் ஒட்டுமொத்தமாக மின்னஞ்சல் தகவல்கள் அனுப்புவதால் ஏற்படும் நெருக்கடியாலோ ஏற்பட வாய்ப்புள்ளது.

4) **எனது விண்ணப்பம் சேமிக்கப்பட்டுவிட்டது என்பதை எவ்வாறு மறு உறுதி செய்து கொள்வது**

வெற்றிகரமாக பதிவு செய்யப்பட்டுவிட்டது என்பது குறித்து சந்தேகம் ஏற்படின், விண்ணப்பத்தினை நகலெடுக்கும் பக்கத்தினுள் நுழைந்து, நகலினை உருவாக்கி, அதனை கணிணியில் சேமித்து வைத்துக்கொள்ளவும், தாளில் நகல் எடுத்து வைத்துக்கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறார்கள்.

5) **இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்து சமர்ப்பித்தப்பின் வெற்று / பூஜ்யம் பதிவு எண் கிடைக்கப்பெற்றால் என்ன செய்வது**

இதுபோன்ற பூஜ்ய பதிவுஎண் மற்றும் கடவுச்சொல் பெறுவது மிகவும் அரிதானது. இதுபோன்ற நிலையில் விபரங்களை மறுபதிவு செய்து, நகல் எடுக்கும் வசதியினை உபயோகித்து நகல் எடுத்து சரிபார்த்து வைத்துக்கொள்ளவும்.

6) **முழுமையான படிவத்தை பூர்த்தி செய்த பிறகு, எனக்கு வெற்றுத் திரை தென்படுதல் / இணைய இணைப்பு துண்டித்தல் / எனது திரை மூடிவிடுதல் / நெரிசலடைதல் / இயங்காமல் இருத்தல் போன்றவை நிகழும்போது எனது விண்ணப்பம் சேமிக்கப்பட்டதா / பதிவு செய்யப்பட்டதா என்பதை எவ்வாறு அறிந்துகொள்வது?**

இனம் எண் 4ஐ பார்க்கவும். நகலெடுக்கும் வசதியைப் பயன்படுத்தி நகலெடுக்க இயலவில்லையெனில், உங்கள் விண்ணப்பம் சேமிக்கப்படவில்லை எனஅறிந்து கொள்ளலாம். மீண்டும் விபரங்களை பதிவு செய்யவும்.

7) **எனது மின்னஞ்சல் தகவலுக்கு ஒப்புகையோ / பதிலோ கிடைக்காவிடில் என்ன செய்ய செய்வது?**

மின்னஞ்சல் வழியாக பதில் அனுப்புதல் செயலி விண்ணப்பதாரர்களின் வசதி கருதி சரியாக தகவல் அனுப்பும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது . "ஒப்புகை அனுப்புதல் "/ “Vacation Mail ” / “Friendship Offers ” / “சலுகை விற்பனை ” போன்றவற்றிற்கான மின்னஞ்சல்களை திருப்பி அனுப்ப இந்த முகவரியைப் பயன்படுத்த வேண்டாம். இதுபோன்ற மின்னஞ்சல்களை தானாக நீக்க எங்கள் அஞ்சல் சேவையகம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

8) தானாக பதிலளிக்கும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்கும் போது நான் என்ன விவரங்களை வைத்திருக்க வேண்டும்?

உண்மையான சிக்கலுக்கு மின்னஞ்சல் மூலம் பதிலளிக்க தயவுசெய்து “பதிவுஎண்” மற்றும் “கடவுச்சொல்“ விவரங்களை வைத்திருக்க வேண்டும்.

9) **இணையதளம் வாயிலாக விண்ணப்பத்தை பதிவு செய்வதில் ஏற்படும் சிக்கல் குறித்து தெரிவிக்க வேண்டுமெனில் என்ன விபரங்களை அளிக்க வேண்டும்?**

பின்வரும் விபரங்களை அளிக்க மறக்க கூடாது

1) பதிவு எண் 2) அலைபேசி எண் 3) பிறந்த தேதி 4) முழுமையான பெயர் போன்றவைகள் விண்ணப்பப் படிவத்தில் உள்ளபடி இருக்க வேண்டும் . விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதில் தோல்வியுற்றாலோ அல்லது ஏதேனும் பிழை ஏற்பட்டாலோ, பிழையின் ஸ்கிரீன் ஷாட்டை JPG, GIF வடிவத்தில் அல்லது MS WORD கோப்பாகவோ வைத்திருக்க வேண்டும். இத்துடன் கணிணியின் விபரங்களை (Like WINDOWS XP, Vista, LINUX போன்றவை)

மற்றும் இணைய உலாவி & பதிப்பு (Internet Explorer 6.0, Mozilla 3.0, Firefox 3.5 போன்றவை) உள்ளிட்ட விபரங்களை அளிக்க வேண்டும்.

10) **விண்ணப்பத்தில் பதிவு செய்த விபரங்களை மாற்றம் / திருத்தம் செய்ய விரும்புகிறேன்.**

இணையதளம் வாயிலாக விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன் , விவரங்களை சரிசெய்ய "திருத்து" விருப்பத்தை தேர்வு செய்க . தயவுசெய்து எந்த விபரங்களையும் மாற்றிய பின் புதியதாக விண்ணப்பத்தினை நகலெடுத்து வைத்துக் கொள்ளவேண்டும் . விண்ணப்பதாரர்கள் பதிவு செய்த அடிப்படை தகவல்களை மாற்ற முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**குறிப்பு:**

எங்கள் உதவி மேசையில் (help desk) அறிவிக்கையை நிரப்புவதற்கு முன் ஜாவா ஸ்கிரிப்ட் (Java Script)இயக்க நிலையில் இருக்கும் . எனவே இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் 9 அல்லது அதற்கு மேற்பட்டவை Mozilla Firefox 3.0 அல்லது அதற்கு மேற்பட்டவை கூகுள் குரோம் 3.0 அல்லது அதற்கு மேற்பட்டவற்றை கொண்டு வேறு ஏதாவதொறு கணிணியிலிருந்த மேலும் ஒரு முயற்சி செய்யுங்கள்

நாள் 12.07.2019

உறுப்பினர் செயலர்
த.நா.வ.சீ.ப.தே.கு